Mat. Sep/Oct. 07.

**8401**

Register Number | | | | | |

# தமிழ் — முதல் தாள்

## ( செய்யுள், உரைநடை )

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் III க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஏழனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. $7 \times 2 = 14$

1. திரு.வி.க. அவர்கள் படைத்த நூல்களுள் நான்கினைக் கூறுக.
2. வலிமையில்லாதவரும் வெல்லுவர் எப்போது ?
3. சிலப்பதிகாரத்தில் உள்ள காண்டங்களின் பெயர்களையும், அவற்றில் உள்ள காதைகளின் எண்ணிக்கையையும் எழுதுக.
4. அனுமன் கண்ட சீதையின் நிலை யாது ?
5. யூதர்கள் சிலுவைமிசை எழுதியது யாது ?
6. பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய இறுதி மூன்று பருவங்களையும் எழுதுக.
7. சுற்றுப்புறத்தைக் காக்க எதனைத் தவிர்த்திடுவோம் எனக் கவிஞர் பூங்கோவன் குறிப்பிடுகின்றார் ?
8. புத்தர் எதை மொழிந்தார் ? எதற்கு உழந்தார் ?
9. பாண்டியன் நன்மாறனின் தோற்றப் பொலிவினைப் புலவர் எவ்வாறு வருணிக்கிறார் ?

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக. $5 \times 4 = 20$

10. ஊக்கமுடையாரது உயர்வினைக் கூறுக.
11. ஊர் ஆண்மைக்குரிய செல்வங்கள் யாவை ?
12. சீதையைக் கண்ட அனுமனின் மகிழ்ச்சியை விவரிக்க.
13. இரண்டாம் திருடனின் இலக்கு யாது ? விளக்குக.
14. தாயுள்ளத்தின் இயல்புகள் யாவை ?
15. குறவஞ்சி - நூற்குறிப்பு எழுதுக.
16. கழுகுமலையின் வளத்தைக் காவடிச் சிந்து எவ்வாறு கூறுகின்றது ?

[ Turn over

III. 17. 'தன்னரிய.......' என்று தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 4

18. 'உரைப்பா......' என்று தொடங்கும் குறட்பாவை எழுதுக. 2

19. 'விடும்' என்று முடியும் குறட்பாவை எழுதுக. 2

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக : $1 \times 8 = 8$

20. சினத்தின் இயல்பையும், அதனை உடைமையாகக் கொள்வார்க்கு வரும் தீங்கினையும் தொகுத்தெழுதுக.

21. சிலப்பதிகார வாழ்த்தின் சீர்மையை விளக்கி எழுதுக.

22. 'விண்மீன்' கூட்டம் என்னும் தலைப்பில் வாணிதாசன் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.

V. 23. பொருத்துக : $4 \times 1 = 4$

| ஆசிரியர் | | நூல் |
|---|---|---|
| அ) நம்மாழ்வார் | — | தேவாரம் |
| ஆ) சமண முனிவர் | — | சீறாப்புராணம் |
| இ) உமறுப்புலவர் | — | திருவாய்மொழி |
| ஈ) கண்ணதாசன் | — | திருப்பாமாலை |
| | — | இயேசு காவியம். |

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : $6 \times 1 = 6$

24. புறநானூறு என்னும் தொடரைப் பிரிக்கும் முறை

அ) புற + நானூறு ஆ) புறநா + நூறு இ) புறம் + நான்கு + நூறு.

25. நெஞ்சை அள்ளுஞ் சிலப்பதிகாரம் என்று பாடியவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) கவிமணி.

26. கம்பரைப் புரந்த வள்ளல்

அ) குமண வள்ளல் ஆ) சடையப்ப வள்ளல் இ) பாரி வள்ளல்.

27. 'கிறிஸ்தவக் கம்பர்' என்று புகழப்படுபவர்

அ) எச். ஏ. கிருட்டிணப்பிள்ளை

ஆ) வேதநாயகம் பிள்ளை

இ) சங்கர நாராயணப் பிள்ளை.

28. வள்ளத்தோள் பாடலை மொழிபெயர்த்தவர் யார் ?

அ) கவிமணி ஆ) காமராசன் இ) துறைவன்.

29. கந்தர் கலிவெண்பாவை இயற்றியவர்

அ) குமரகுருபரர் ஆ) திரிகூட இராசப்பர் இ) கச்சியப்பர்.

VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக.

5 × 2 = 10

30. இந்தியாவில் ஏராளமாக உள்ள தாது வகைகள் யாவை ?

31. மக்கள் எம்முயற்சியில் தலைப்பட வேண்டும் என திரு.வி.க. விழைகிறார் ?

32. அரங்கேற்றம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

33. மு.வ. அவர்களின் நெஞ்சில் இனிப்பது யாது ?

34. திருக்குறளிலுள்ள எந்தெந்த அதிகாரங்களில் வ.உ.சி. அவர்களுக்கு ஆர்வம் அதிகம் ?

35. பொருள்களின் மூன்று உருவ நிலைகள் யாவை ?

36. அம்பலத்தாடியார், ஔவையாரைப் பற்றிப் பிறர் கூறுவதாகக் கூறியெதென்ன ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **நான்கனுக்கு** ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை எழுதுக.

4 × 4 = 16

37. இந்தியாவின் உள்வளத் திறமைகளைக் கணிப்பதற்கு முன் நாம் செய்ய வேண்டிய முதல் பணியை எழுதுக.

38. கலிலியோ கண்ட அறிவியல் உண்மைக்கு எந்தச் சூழல் அடிப்படையாக அமைந்தது ?

39. வாலஸ் என்பவர் யார் ? அவருக்கும் சிதம்பரனார்க்கும் இருந்த தொடர்பினை விளக்குக.

40. இல்வாழ்க்கை எப்படி வளர வேண்டும் என மு.வ. வாழ்த்துகிறார் ?

41. எத்தகைய அறிவுக் குறைவால் நாடு மிக இழிந்த நிலை பெற்றிருக்கிறது எனத் திரு.வி.க. கவலைப்படுகிறார் ?

42. அம்பலத்தாடியார் அறிவிற் குறைபாடுடையவர் என்பதற்கு இரு சான்றுகள் தருக.

VIII. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகட்கு மிகாமல் விடை எழுதுக.

1 × 8 = 8

43. பெரியாரின் மதுவிலக்குத் தொண்டு பற்றித் தொகுத்து எழுதுக.

44. புதுமை, பழமை இவை பற்றி மு.வ. அவர்களின் கருத்துக்களை தொகுத்து எழுதுக.

45. உமறுப்புலவர் சீறாப் புராணத்தைச் செஞ்சொற் கவிதையாக அமைத்த நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.

IX. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க : $4 \times 1 = 4$

46. நம் நாட்டில் இன்னும் ஆராய வேண்டிய வளங்கள்

    அ) கனிம வளங்கள்

    ஆ) மண் தாதுக்கள்

    இ) கடலடி வளங்கள்.

47. ஆண்மான் என்னும் பொருள் தரும் சொல்

    அ) கழை

    ஆ) களை

    இ) கலை.

48. 1906 ஆம் ஆண்டு நிகழ்ந்த கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர்

    அ) தாதாபாய் நௌரோஜி

    ஆ) அன்னிபெசன்ட் அம்மையார்

    இ) திலகர்.

49. 'நீர்ப் பொருளின் சுருங்கா இயல்பு' என்னும் அறிவியல் உண்மையைக் கண்டுபிடித்தவர்

    அ) நியூட்டன்

    ஆ) கலிலியோ

    இ) பாஸ்கல்.

X. கீழ்க்காணும் சொற்களுள் எவையேனும் **இரண்டினை** மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுதுக. $2 \times 1 = 2$

50. அ) விழிப்பாக

    ஆ) தலைசிறந்த

    இ) செம்மையாக.